தினகரன்

## வேளாண் துறை மூலம் மலட்டு விதைகள் வினியோகம் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றச்சாட்டு உழவர் பெருவிழா தேவையில்லை

பதிவு செய்த நேரம்:2012-04-28 12:41:35

நாகை: வேளாண் துறை மூலம் மலட்டு விதைகள் வினியோகம் செய்யப்படுவதாக குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் குற்றச்சாட்டினர்.

நாகை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று கலெக் டர் முனுசாமி தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது.

விவாதம் குறித்த விவரம்:

திருமருகல் ராமகிருஷ்ணன் பேசுகையில்,

மாவட்டத்தில் 62 சதவீ தம் நிலத்தடி நீர் இல்லாத பகுதியாக உள்ளன. ஆற்று பாசனத்தை நம்பிதான் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருக்கி றோம். எனவே குறுவைக்கு தண்ணீர் திறப்பதற்கு முன்னர் தேசிய வேலை உறுதி அளிப்புத்திட்டத்தின் மூலமாக ஆறு, வாய்க்கால்களில் உள்ள சீமை காட்டாமணக்கு, வெங்காயத்தாமரை ஆகியவற்றை அழிக்க வேண்டும் என்றார்.

விவசாயிகள் சங்க மாவ ட்ட தலைவர் சரபோஜி பேசுகையில், ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ.1500ம், ஒரு டன் கரும்பிற்கு ரூ.3 ஆயிரமும், ஒரு குவிண்டால் மரவள்ளிக்கிழங்கிற்கு ரூ.800ம் கொடுக்க வேண்டும். நிலுவையில் உள்ள இன்சூரன்ஸ் தொகையை உடனடியாக கொடுக்க வேண்டும் என்றார்.

வேட்டைக்காரனிருப்பு முஜீபுஷரீக் பேசுகையில்,

பிரிஞ்சுமூலை சட்ரஸ் தலைப்பு முதல் அரிச்சந்திரா ஆற்றின் வேட்டைக்காரனிருப்பு கடல் முகத்துவாரம் வரை உள்ள ஆற்றை தூர் வார வேண்டும். வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் உள்ள அரிச்சந்திரா ஆற்றில் உள்ள கிளிஞ்சல்களை அகற்ற வேண்டும் என்றார்.

தலைஞாயிறு சம்பந்தம் பேசுகையில்,

சர்க்கரை ஆலை தொழிலாளர்களின் காலவரையற்ற வேலைநிறுத்தத்தால் நாளொன்றுக்கு 47 ஆயிரம் டன் கரும்பு அரவை பாதிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்த கரும்புகளும் வெட்டப்படாமல் உள்ளது. காலம் தாழ்த்தி அறுவடை செய்தால் சர்க்கரையின் அளவு குறைந்துவிடும். இது விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத் தும்.

எனவே உடனடியாக வேலைநிறுத்தத்தை முடிவு க்கு கொண்டு வர வேண் டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தர வேண்டும் என்றார். இவ் வாறு விவாதம் நடந்தது.

மயிலாடுதுறை அலெக்சாண்டர் பேசு கையில், உழவர் விழாக்கள் போலியாக நடத்தப்படுகிறது. எந்த விவசாயியும் எனக்கு சாப்பாடு வேண்டும். வடை வேண்டும் என்று கேட்கவில்லை. தான் விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை தான் கேட்கிறான். விரு ந்து இல்லை. வேளாண் துறை மூலம் வினியோகிக்கப்படும் விதை உளுந்து முளைப்புத்திறன் இல்லாமலும், மலட்டு விதைகளாகவும் உள்ளன என்றார்.

## விவசாயத்தில் அதிக லாபம் பெற மாற்று பயிர் சாகுபடி கலெக்டர் அறிவுரை

பதிவு செய்த நேரம்:2012-04-28 12:44:49

திருவாரூர்: விவசாயத்தில் அதிக லாபம் பெற, மானியம் கிடைக்க மாற்றுப்பயிர் சாகுபடியை விவசாயிகள் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கலெக்டர் நடராஜன் அறிவுரை வழங்கினார். திருவாரூர் மாவட்டத்தில் மேட்டூர் அணை தண்ணீரைக்கொண்டு விவசாயிகள் குறுவை, சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்துவருகின்றனர். கோடை காலத்தில் நெல் தரிசில் உளுந்து, பயிர் சொற்ப பரப்பளவில் மட்டுமே செய்துவருகின்றனர். நெற்பயிர் தவிர பணப்பயிர்களான பருத்தி, நிலக்கடலை, மக்காச்சோளம், மல்பெரி, கரும்பு, மரவள்ளிகிழங்கு போன்ற பயிர்களையும் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைந்த பரப்பளவில் மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர்.

மாற்று பயிர்கள் சாகு படி செய்யும் பரப்பளவை அதிகரிக்க வேண்டும் என்பதை கலெக்டர் நடராஜன் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடம் எடுத்து கூறினார். இதையடுத்து, திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் ஒன்றியத்தில் சித்தமல்லி, ஆதனூர், சோனாப்பேட்டை, எடஅன்னவாசல், நரசிங்கம்பேட்டை, இடையர்நத்தம்படுகை, செட்டிசத்தி ரம்அய்யம்பேட்டை, முன்னாவல்கோட்டை உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளின் வயல்களுக்கு நேரில் சென்று மாற்று பயிர் சாகுபடி பயிர்களான மக்காச்சோளம், மல்பெரி பயிர்களை பார்வையிட்டு விவசாயிகளிடம் இயற்கை உரங்களை இட வேண்டும். அதிக லாபம் மற்றும் மானியம் கிடைக்க விவசாயிகள் மாற்று பயிர் சாகுபடியை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று கூறினார்.

சோனாப்பேட்டையில் மாதவன் என்பவரின் வயலுக்கு சென்ற கலெக்டர் நடராஜன் இயந்திரம் மூலம் நிலக்கடலை பிரித்தெடுக்கும் பணியை பார்வையிட்டார். நிலக்கடலை கழிவுகளைக்கொண்டு இயற்கை உரம் தயாரித்து வயல்களில் எருவாக பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்றார். இயந்திரம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பது குறித்து செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது.

எடஅன்னவாசல் கிராமத்தில் பாலையா என்பவர் வயல்களில் மீன் வளர்ப்பு குட்டையை பார்வையிட்டார். அவரிடம் மீன் குட்டைக்கு மத்தியில் கோழி வளர்ப்பு கொட்டகை அமைத்து

கோழிவளர்க்க கேட்டுக்கொண்டார். மேடான பகுதியில் ஒரு ஏக்கரில் மட்டுமாவது மல்பெரி சாகுபடி செய்யவேண்டும். மல்பெரிக்கு அரசு வழங்கும் மானியத்தொகையை பெற்று மல்பெரி சாகுபடி செய்யுங்கள் என்றார்.

கலெக்டருடன் வேளாண் துணை இயக்குனர் மயில்வாகனன், வேளாண் அறிவியல் நிலைய தலைவர் டாக்டர் செங்குட்டுவன், வேளாண் உதவி இயக்குனர் இளஞ்செழியன் ஆகியோர் சென்றனர்.

---